**CC.No.154/2011** **14.07.2025**

**Pw1-** தனலெட்சுமி, க/பெ கணேசன்

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

என்னுடன் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 2 சகோதரிகள், 1 சகோதரர். எனது சொந்த ஊர் எது என்றால் தந்தை ஊர் வஞ்சிநகரம். நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் அ.புதுப்பட்டி, பிரான்மலை கிராமம், வஞ்சிநகரத்தில் எனது தாய், தந்தை குடியிருக்கவில்லை என்றால் எனது தாய் வஞ்சிநகரத்தில் குடியிருந்து வருகிறார், அடிக்கடி என்னை பார்க்க அ.புதுப்பட்டி வந்து செல்வார். சாட்சி கணேசன், மற்றும் அம்பிகாவிற்கு எந்த ஊரில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் எஸ், வையாபுரிபட்டியில் குடியிருந்து வருகிறேன். வையாபுரிபட்டியும், புதுப்பட்டியும் அருகே என்றால் சரியல்ல, 4 கி.மீ தூரம் இருக்கும். இருசக்கர வாகனத்தில் சென்றால் 4 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரியல்ல. இரண்டு ஊரும் அருகருகே உள்ள கிராமம் எனது அக்கா மற்றும் அவரது கணவரின் பராமரிப்பில் நான் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

2) புதுப்பட்டியும், வையாபுரிபட்டியும் ஒரே கிராமம் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, புதுப்பட்டி பிரான்மலை பஞ்சாயத்தை சேர்ந்தது, எஸ்.வையாபுரிபட்டி, சிறுமருதூர் கிராமத்தை சேர்ந்தது. நான் சொல்லும 2 கிராமமும் ஒரே எல்லையை பகிர்ந்து கொள்ளும் கிராமம் என்றால் சரியல்ல. ஒரே கிராமத்திற்கு நான்கு பக்கமும் கிராமங்கள் இருக்கும், அவ்வாறு புதுபட்டியை சுற்றி உள்ள கிராமங்களின் பெயர் என்ன என்றால் புதுப்பட்டியின் கிழக்கு எஸ்.வி,மங்களம், புதுப்பட்டியின் மேற்கில் பிரான்மலை, புதுப்பட்டியின் வடக்கில் வேங்கைபட்டி, புதுப்பட்டியின் தெற்கே பூலாப்பட்டி உள்ளது. அதுபோல் வையாபுரிபட்டியின் நான்குமால் என்ன என்றால் வையாபுரிபட்டியின் கிழக்கில் திருக்கலாம்பூர், வையாபுரிபட்டியின் மேற்கில் சிறுமருதூர், வையாபுரிபட்டியின் வடக்கில் செலியம்பட்டி,

வையாபுரிபட்டியின் தெற்கில் ஐன்நுற்றுப்பட்டி.

3) நான் சொல்லும் நான்குமால் சரியல்ல, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையை நான்குமாலை சொன்னால் நான் சாட்சி கணேசனின் கட்டுப்பாட்டில் இருப்பது தெரியவரும் என்பதால் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புதுப்பட்டிக்கு நான்குமாலில் வடக்கே பிரான்மலை, மேற்கே தேனாம்பாள்பட்டி, கிழக்கே வையாபுரிபட்டி, தெற்கே தேனாம்பாள்பட்டி ரோடு, சிங்கம்புணரி ரோடு, இதுதான் உண்மையான நான்குமால் இதை மறைத்து உண்மை தெரிந்துவிடக்கூடாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் திருமணமாகி, 1ம் எதிரி கணேசனுடன் பிரச்சனை சமரசமாகி 8 மாதம் அவரது வீட்டில் வாழ்ந்தேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் புகார் 13.08.2011ற்கு முன்பாக 2 முறை புகார்கள் கொடுத்தேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் ஆஜர் எதிரிகள் அவமரியாதையாகவோ, அவதுறாக பேசவில்லை என்றால் சரியல்ல. அதுபோல் எதிரிகள் என்னிடம் நகைகளை எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. இந்த எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் என்னை கொடுமைப்படுத்தவில்லை, வரதட்சணை எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை வீட்டிற்கு வந்து எதிரிகள் யாரும் வந்து என்னையும், எனது தந்தையும், அடிக்கவோ, தகராறு செய்யவோ, தள்ளிவிடவோ இல்லை என்றால் சரியல்ல.

4) என்னிடம் 1ம் எதிரி கணேசன் நகைகை என்னிடமிருந்து எப்போது பெற்றுக்கொண்டு அதை யாரிடம் கொடுத்தார் என்றும், எந்த தேதியில் விற்றார் என்றும் எனது புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல, எனது புகாரில் குறிப்பிடவில்லை, ஆனால் என்னிடமிருந்து 1ம் எதிரி

கணேசன் பெற்றுக்கொண்டார். அதேபோல் புகாரில் 1ம் எதிரி திருமணமாகி 15 நாளில் நகையை என்னிடமிருந்து வாங்கி கொண்டார் என்பதற்கு புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் 20.10.2010. நான் உடனடியாகவும் புகார் கொடுக்கவில்லை, 20.10.2010ம் தேதியும் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் புகாரிலும், முதல் விசாரணையிலும் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை, நான் அழைத்து 1ம் எதிரி தனிக்குடித்தனம் வரவில்லை என்பதால் 1ம் எதிரியின் தாய், தந்தைகளை கை விடுத்து வரவில்லை என்பதனாலும், பின்னிட்டு பின் யோசனை செய்து எதிரிகளை பழிவாங்கும் எண்ணத்தில், தன்னுடன் தனி குடித்தனம் வர வேண்டி பொய்யாக எதிரிகள் மீது பொய்யாக குற்ற சாட்டு சுமந்துகிறேன் என்றால் சரியல்ல.

5) எனக்கு தகப்பனார் வீட்டில் பாகப்பிரிவினை செய்து எவ்வளவு சொத்து கொடுக்கப்பட்டது என்றால் எதுவும் கொடுக்கவில்லை. எனக்கு 2 ஏக்கர் தென்னந்தோப்பு அந்த பாகப்பிரிவினையில் கொடுக்கப்பட்டு, அது சிங்கம்புணரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு, நான் அந்த சொத்தை இருந்து அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு கொடுக்கப்பட்டுள்ளது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.